**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு**

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை**

| **உரிய நியமத்தின் தொடர்படன் இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 | | |
| நியமத்தின் 45 மற்றும் 46 ஆம் பந்திகளின் பிரகாரம் பொருண்மையான மற்றும் ஒத்த சொத்து வகுப்புகள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் வகைப்படுத்தப்பட்ட சுருக்கத் தரவு நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட வேண்டும். | சொத்து உருப்படிகள் வகுப்புகளாக வகைப்படுத்தப்படும் வகையில் கணக்கீட்டு மென்பொருள் கட்டமைப்பை நாளதுவரையாக்க | நியமத்தின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும், இதற்கு நேர்மாறாக, அதிகாரசபையானது, மீளாய்வின் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது, அவற்றைச் சுருக்கமாகக் கூறுவதற்குப் பதிலாக, அவற்றையே விரிவாகக் குறிப்பிட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 | | |
| | நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம், காசு மற்றும் காசுக்கு சமனானவை, கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான குறுகிய கால முதலீடுகளை உள்ளடக்கியது. ஆனால் ரூபா 258 மில்லியன் பெறுமதியான 03 மாத முதிர்வு கொண்ட நிலையான வைப்புத்தொகையின காசு மற்றும் காசுக்கு சமனான தொகையாக அதிகார சபை உள்ளடக்கவில்லை. | முதலீடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு 03 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான காலப்பகுதியில் முதிர்ச்சியடையும் முதலீட்டு பெறுமதி காசு மற்றும் காசுக்கு சமனானவையின் கீழ் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம், காசு மற்றும் காசுக்கு சமனானவை அடையாளம் காணப்பட வேண்டும். |
| | இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காசு மற்றும் காசுக்கு சமனானவை அதே அளவு குறைவாகக் கணக்கிடப்பட்டன மற்றும் முதலீட்டு பெறுமதி அதே அளவினால் அதிகமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 | | |
| | நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனத்தினால் முன்னைய காலப்பகுதிகளின தவறுகள் இனங்காணப்பட்டு பின்னர் வெளியீட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் முதல் தொகுப்பில், அது நிகழ்ந்த காலத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பீட்டு புள்ளிவிவரங்களை மீண்டும் குறிப்பிடுவதன் மூலம் பிழை திருத்தப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையால் 2015 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 05/2015/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம், நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த சீதாவக்க வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாணங்களுக்கு அரசிடமிருந்து கிடைத்த ரூபா 2.41 மில்லியனான மானியங்களுக்கு உரிய சீராக்கங்கள் அந்த வருடத்தில் மேற்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் | எதிர்காலத்தில், நிதிக்கூற்றுக்களை கடந்த காலகட்டங்களின் பிழைகளை சரிசெய்யும்போது, அந்தக் காலத்திற்கான ஒப்பீட்டு மதிப்புகளை மீண்டும் குறிப்பிட நடவடிக்கை எடுக்கின்றேன். நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் உரிய ஆண்டுகளில் தீர்மானம் எடுத்து இனங்காணுவதற்கு மற்றும் முன்னைய வருடங்களின் சீராக்கங்களை முன்னோக்கி சீராக்குவதற்கு | நியமத்தின் பிரகாரம், கடந்த வருடங்களின் சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையின் மீளாய்வாண்டின் மிகை அந்த அளவினால் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. மேலும், கடந்த வருடத்திற்க உரியதாக அதிகாரசபையால் செலுத்தப்பட்ட ரூபா 1.59 மில்லியனான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் போது சீராக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் மிகை அந்த அளவினால் குறைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 | | |
| (i) | நியமத்தின் 55 ஆம் பந்தயின பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போது (dispose) தேறிய சொத்துக்கள் / மூலதனத்தினுள் உள்ளடங்கியுள்ள அந்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு மிகை நேரடியாக திரண்ட மிகைக்கு அல்லது பற்றாக்குறைக்கு மாற்றப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையால் ஆண்டினுள் அகற்றப்பட்ட 55 சொத்துக்களுக்கு உரியதாக கடந்த வருடங்களில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 0.74 மில்லியனான மீள்மதிப்பீட்டு மிகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு திரண்ட மிகைக் கணக்கிற்கு சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் மிகைக்கு சீராக்கப்பட்ட காரணத்தால் ஆண்டின் இலாபம் அந்த அளவினால் குறைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு பரிசோதிக்கப்பட்டு உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை கைத்தவிர்க்கும் போது உரிய மீளமதிப்பீட்டு பெறுமதி அகற்றப்பட வேண்டும் என்பது. |
| (ii) | அரசாங்க மானியமாக, 2019 ஏப்ரல் 24 அன்று மானியக் கடிதம் இலக்கம் 4/7/7422 இன் கீழ் அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட அனுராதபுரம் துரு இதுருகமவில் உள்ள 108 காணிகளில் 6 காணித் துண்டுகளில் சுதாரகா தொழில்நுட்பத்தின் கீழ் கட்டப்பட்ட 06 வீடுகளின் பெறுமதி 2016 ஆம் ஆண்டில் ரூபா 5.92 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. எனினும், தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகத்தால் 2022 ஒக்தோபர் 10 ஆந் திகதி களப் | அனுராதபுரம் துரு இதுருகம காணியில் சுதாரக தொழில்நுட்பத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 06 வீடுகளின் பெறுமதியாக காணப்படும் ரூபா 4.9 மில்லியன் நிர்மாணச் செலவு ஆகும். அதன்படி, ஒப்பந்த செலவுகள் கணக்கு வைக்கப்படுகின்றன. அந்த 06 வீடுகள் | சொத்துக்களின் நியாயமான மதிப்பு கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மோசமான கட்டுமான முறைகளைப் பயன்படுத்தி இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதும், மேலும் களிமண் மற்றும் சிமெண்டால் செய்யப்பட்ட சுவர்களால் கூரையைத் தாங்க முடியாது. அதன்படி, இந்த வீடுகள் மனிதர்கள் குடியிருக்க பொருத்தமற்றது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இந்த வீடுகளின் மதிப்பு குறைவது காலப்பழிவாக அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் சொத்துக்கள் அந்த பெறுமதியால் மிகைக் கணக்கீட்டுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன.<br><br>எனினும், அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் 2022 மே 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி, அந்த 06 வீடுகளின் மதிப்பு ரூபா 7.55 மில்லியன் என 2016 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையுடன் ஒப்பிடுகையில் இதன் பெறுமதி ரூபா 1.62 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டை வழங்கும் போது, இந்த 6 வீடுகளும் சீமெந்தினால் செய்யப்பட்ட மற்ற 102 வீடுகளைப் போலவே கருதப்பட்டதையும் அவதானித்ததால், இந்த மதிப்பீடு சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது. | தொடர்பான காணியின் பெறுமதி 2022 மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அநுராதபுரத்தில் உள்ள 102 காணிகள் தொடர்பாக 2022 இல் பெறப்பட்ட மதிப்பீட்டை கணக்குகளில் மாற்றியமைக்க நான் நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 | | |
| (i) | நியமத்தின் 10 ஆம் பந்தி மற்றும் IG 30 மற்றும் 31 ஆம் பந்திகளின் பிரகாரம், பெறப்பட்ட ஆதாரங்களுக்கு பதிலளிக்கும் வகையில் நிறுவனம் நேரடியாக சில பரிசீலனைகளை வழங்கலாம் ஆனால் பெறப்பட்ட வளங்களின் நியாயமான மதிப்புக்கு சமமாக இல்லாத சந்தர்ப்பங்களில் பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் | நிட்டம்புவ காணியின் ரூபா 120 மில்லியன் என மதிப்பீடானது 09 ஏக்கர் 03 ரூட் 21.10 பேர்ச் பரப்பளவுக்கே பெறப்பட்டுள்ள போதிலும், வர்த்தமானியின் அடிப்படையில் அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்டுள்ள | அதிகாரசபைக்கு சொந்தமான நிலத்தின் அளவு தொடர்பான மதிப்பை மட்டுமே கணக்கிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கலவை உள்ளதா என்பதை ஒரு நிறுவனம் தீர்மானிக்க வேண்டும் என்பதுடன், அந்த ஒத்த அலகுகள் தனித்தனியாக இனங்காணப்பட வேண்டும். அதற்கு முரணாக நியாயப் பெறுமதி ரூபா 120 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 9 ஏக்கர்கள் 03 ரூட் 21.10 பேர்ச் பரப்பளவான நிட்டம்புவ ஓர்சட்வத்த எனும் இடத்தில் உள்ள காணியில் 9 ஏக்கர்கள் 20.2 பேர்ச் காணியானது காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டு, அதற்காக சுமார் ரூபா 60 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதிகாரசபையால் சாட்டுதல் செய்யப்பட்ட பிரிவின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு அல்லது உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் ளவானது 9 ஏக்கர் 20.2 பேர்ச் ஆகும். அதன்படி, அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் சரியான மதிப்பீட்டைப் பெற்று, பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனையின் வருமானச் செலவினத்தை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ii) | நியமத்தின் 17 ஆவது பந்தியின் விதிகளின்படி, உரிய மேம்படுத்தல் கடப்பாடுகளின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும் எனினும், லுனாவ வீடமைப்புத் திட்டத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ரூபா 1,267.32 மில்லியன் தொகையானது 2020 திசெம்பர் 02 ஆந் திகதிய அமப/20/1844/306/055 ஆம் இலக்க அமைச்சரவையின் முடிவின்படி அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் எனினும், மேம்படுத்தல் கடப்பாடுகள் கணக்கு வைக்கப்படவில்லை. நிதி நிலைமைக் கூற்றில் அரசாங்க மானியங்கள் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காட்டப்பட்டதால், உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்கள் அதே மதிப்பில் மிகையாக மதிப்பிடப்பட்டது. | திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தல் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யுமாறு அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) | நியமத்தின் 14, 15, 16, 76 ஆம் பந்திகள் மற்றும் IG 18,19,20 மற்றும் 21 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் | அறவிடப்படாது அதிகாரசபைக்கு கிடைத்துள்ள நிலையான சொத்துகளின் மதிப்பை | அரசின் மானியங்கள் சம்பந்தப்பட்ட ஆண்டில் செயல்திறன் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம், பறிமாற்றம் செய்யப்படாத பரிவர்த்தனைகளில் கிடைத்த மிகை அறவீட்டினை நிதிச் செயலாற்றல் கூற்றில் இனங்காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபைக்கு கிடைத்திருந்த திநைசேரி மானியங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் திரண்ட மீதி ரூபா 2,458.05 மில்லியன் நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் பறிமாற்றம் செய்யப்படாத பரிவர்த்தனைகளில் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் முதற்தடவையாக கையகப்படுத்திய திகதியில் நியாயப் பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், திறந்த கொடுப்பனவாக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த மொரட்டுவ லுணாவ அரச காணி 2022 ஆம் ஆண்டு அதிகாரசபைக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டினுள் குறித்த வீடமைப்பு செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட 356 வீடுகள் விற்பனை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அகற்றல் கிரயத்தினை கணிப்பீடு செய்யும் போது இந்த காணியின் பெறுமதி கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வீடுகளின் கிரயக் கணிப்பீடானது சிக்கலானதாக காணப்பட்டது. இந்த காணியின் நியாயப் பெறுமதியை கணிப்பிட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச மானியக் கணக்கிலிருந்து வருமானச் செலவினம கணக்கிற்கு இனங்காண எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன்.<br><br>2022 ஆம் ஆண்டில், அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட லுனாவா நிலத்தின் நியாயமான மதிப்பைப் பெற்ற பிறகு, நான் அதை கணக்குகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அறிக்கையில் முழுமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (iv) | நியமத்தின் 94 மற்றும் 96 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபைக்கு மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 8.6 மில்லியனான மூலதன மானியம் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா | நிறுவனத்திற்கு சாட்டப்படும் நிலையான சொத்துக்களை எதிர்காலத்தில் வருமானச் செலவினமாக இனங்காண நடவடிக்கை எடுக்கின்றேன். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 14 மில்லியனான பிற்போடப்பட்ட வருமானமும் இனங்காணப்பட்டிருந்தது. | | |
| (v) | நியமத்தின் 106 மற்றும் 107 ஆம் பந்திகளின் பிரகாரம், காலப்பகுதியினுள் பறிமாற்றம் செய்யப்படாத பரிவர்த்தனைகளில் கிடைத்த மிகை அறவீட்டின் பெறுமதி பிரதான வகுப்புகளின் மூலம் தனித்தனியாக காண்பித்து நிதிக்கூற்றுக்களில் முகப்பில் அல்லது குறிப்பில் வெளிப்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு பறிமாற்றம் செய்யப்படாத பரிவர்த்தனைகளில் கிடைத்த மிகை அறவீட்டினை இனங்கானுவதற்கு அதிகாரசபையால் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட வேுண்டிய போதிலும், அந்த வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் இலக்கம் 106, 107 இற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய வெளிப்படுத்தல்களின் கீழ் அதிகாரசபைக்கு உரிய விடயங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் குறிப்புகளின் கீழ் காண்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | பற்மாற்றப்படாத பரிவர்த்தனைகளில் கிடைத்த வருமானச் செலவினங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 12 | | |
| (i) | நியமத்தின் பந்தி 14(அ) இன் பிரகாரம், குத்தகை ஒப்பந்தத்தின் முடிவில் சொத்தின் உரிமை குத்தகைதாரருக்கு மாற்றப்பட்டால், அது நிதி குத்தகையாக இனங்காணப்பட வேண்டும். இதன்படி, அதிகாரசபையால் நீண்ட கால குத்தகை ஒப்பந்தத்தின் கீழ், வணிக அடிப்படையில், நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 22 வீடுகளை நிதிக் குத்தகைகளாக அங்கீகரிக்க வேண்டும் என்றாலும், இந்த நியமத்தின் பிரகாரம் அவை நிதி குத்தகைகளாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. 25 சதவீத முன்பணம் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்த காரணத்தால், இந்த வீட்டு ஒதுக்கீடுகளும் இந்த ஆண்டில் விற்பனையாகவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக சரியான கணக்கீட்டு கொள்கையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டு புதிய கணக்காய்வு அவதானிப்புகளாக முன்வைக்கப்பட்டுள்ள இந்த விடயங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். | நியமத்தின் பிரகாரம் நிதி குத்தகை மற்றும் விற்பனை இனங்காணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) அதிகாரசபையால் இந்த நியமத்திற்கு முரணாக மீளாய்வாண்டினுள் விற்பனை செய்யப்பட்ட 04 வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக, ரூபா 20.61 மில்லியன் வருமானமாக இனங்காணப்பட்டிருந்ததுடன்,இதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை அதே அளவினால் மிகை மதிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | எதிர்காலத்தில் இந்த விடயங்களில் கவனம் செலுத்துவேன். | நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய விற்பனை வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (எ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 13 | | |
| நியமத்தின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், முதலீட்டு சொத்து என்பது வாடகைக்கு ஈட்டுவதற்காகவோ அல்லது மூலதன மதிப்பை அதிகரிப்பதற்காகவோ அல்லது இரண்டு நோக்கங்களுக்காகவும் வைக்கப்பட்டுள்ள நிலம் அல்லது கட்டிடம் அல்லது கட்டிடத்தின் ஒரு பகுதி அல்லது இரண்டையும் குறிக்கும். ஆனால், அதிகாரசபை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 3 வீடுகளுக்கு உரிய ரூபா 146.76 மில்லியன் மதிப்புள்ள வீடுகள் மற்றும் வணிக அலகுகள் முதலீட்டுச் சொத்தாக இனங்காணப்படாது நிலையான சொத்துகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. | ஆதனத்தில் உள்ள அனைத்து வீட்டு அலகுகளும் முழுமையாக அகற்றப்படும் வரை, அது அதிகாரசபையின் பெயரில் அதிகாரசபைக்கு சொந்தமான சொத்து ஆகும். | நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால், அது முதலீட்டுச் சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 | | |
| நியமத்தின் 96 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டவட்டமான ஆயட்காலத்தை கொண்ட கட்புலச் சொத்தொன்றின் பெறுமானத் தேய்விடப்பட வேண்டிய பெறுமதி ஏதேனும் அடிப்படையொன்றில் அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் தேய்மானம் பயிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 500,000 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருளுக்காக மீளாய்வாண்டின் போது எதுவித காலக்கழிவு செலவினம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், நியமத்தின் 117 ஆம் பந்தியின் பிரகாரம் கட்புலச் சொத்துக்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் கட்புலச் சொத்துக்களின் கீழ் ஒரு சொத்து உருப்படி மாத்திரம் உள்ளடக்கப்படுவதுடன், அது தொடர்பான விபரங்களை கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் கட்டுபலச் சொத்துக்கள் இனங்காணப்பட வேண்டும் என்பது. |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதில் உள்ளபடியாக நிலையான வைப்புக்களுக்கு பெற வேண்டிய வட்டி ரூபா 51.48 மில்லியன் ஆன போதிலும் நிறுத்தி வைத்தல் வரி ரூபா 2.71 மில்லியன் உடன் பெற வேண்டிய வட்டி ரூபா 54.19 மில்லியனாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 2.71 மில்லியன் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதிர்வடைவதற்கு உள்ள நிலையான சொத்துக்களின் அடிப்படையில் அளவிடப்படும் வரி உள்ளபடியான வருமானம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் கணக்கு வைக்கப்படும். | வருமானம் மற்றும் செலவினம் அட்டுறு அடிப்படையில் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ அதிகாரசபையின் நிதியத்தின் நிதியேற்பாட்டினை ஒதுக்கி ஊழியர்களுக்கு இடர் கடன் வழங்குவதற்கு பேணி செல்லப்படும் இடர் கடன் ஏற்பாட்டு நிதியத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 15 மில்லியன் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கபட்டிடாததுடன் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அந்த பெறுமதியால் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி உரிமையாண்மை மற்றும் ஒதுக்கம் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | இடர்கடன் ஏற்பாட்டு நிதியம் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | இடர் கடன் நிதியம் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும் என்பது. |
| (இ) அதிகாரசபையின் விற்பனை பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி லுணாவ வீடமைப்பு செயல்திட்டத்தில் வணிக | அவ்வப்போது அறவீட்டுப் பிரிவின் ஊடாக சேகரிக்கப்பட்ட அனைத்து தவணை பணங்களும் உள்ளடங்கி இருக்கவில்லை என்பதுடன் அதனால் | ஆண்டின் போதான கடன் அறவீடுகள் சரியான பெறுமதிகளில் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் அகற்றப்பட்ட 178 வீட்டு அலகுகளின் கிடைத்த ரூபா 448.1 மில்லியன் பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 435.5 மில்லியன் ஆக காணப்பட்டமையால், அவற்றுக்கு இடையேயான வேறுபாடு ரூபா 12.56 மில்லியன் என அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் மீதியுடன் இணக்கம் செய்யும்போது ரூபா 12.56 மில்லியன் ஆன வேறுபாடு நிலவுகிறது. | வேண்டும் என்பது. |
| (ஈ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி ஹம்பாந்தோட்ட வீடமைப்பு செயல் திட்டத்திற்கு உரியதாக 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை கடன் தவணை பெறுமதியான ரூபா 3.4 மில்லியன் பெறவேண்டிய கணக்குகளில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் அதிகார சபையின் நடைமுறை சொத்துக்கள் அந்த பெருமதியால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | கடன் இருப்பில் உள்ளடங்கியுள்ள ஹம்பாந்தோட்ட வீடமைப்பு செயல் திட்டத்திற்கு உரிய மொத்த நிலுவை பெறவேண்டிய தவணைகளாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடன் தவணைகளை நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்க வேண்டும் என்பது. |

### 1.5.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பந்தி 15 இன் படி, நகர்ப்புற குடியிருப்பு பகுதியில் உள்ள சமூகத்தின் பொது நலன் மற்றும் சமூக மற்றும் கலாச்சார மேம்பாடு மேம்படுத்தப்பட்டு அந்த பகுதியின் விவகாரங்கள் | அரச செலவினக் கட்டுப்பாட்டு BD/CBP/01/01/04-2022 தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின்படி, நிர்மாண நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு, அதிகாரசபையின் உள்ளக ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, வத்தளை (வெலிசர), ஸ்ரீ ஜயவர்தனபுர, நிட்டம்புவ, | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்வகிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டில், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட துடுவேகொட மற்றும் நாவலப்பிட்டி நகர குறைந்த வருமானம் பெறும் 02 வீட்டுத் திட்டங்களைத் தவிர, பௌதீக அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை மற்றும் 05 மனித அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டுள்ளன. | கடுவெல ஆகிய இடங்களில் நடுத்தர வருமான வீட்டுத் திட்டங்களின் பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புனர்வாழ்வு அடிப்படையில் அதிகாரசபையினால் வீடுகள் வழங்கப்பட்ட 06 வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் மீளப்பெற வேண்டிய மொத்தக் கடன் தவணைப் பெறுமதி ரூபா 112 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 2-5 வருட காலப்பகுதிக்குள் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 47.31 மில்லியன் ஆகும். அதேவேளை, 05 வருடங்களுக்கு அப்பால் மீளப்பெற வேண்டிய கடன் மீதி ரூபா 30.12 மில்லியனாக இருந்ததுடன் அந்த பெறுமதி முறையே மொத்த கடன் தவணை மதிப்பில் 42 வீதம் மற்றும் 27 வீதமாகும். | பத்து வழி மீட்பு செயல்முறையின் கடன் மறுசீரமைப்பு, அழைப்பாணைக்கு அனுப்புதல் மற்றும் சட்ட நடவடிக்கை ஆகிய கடைசி 03 நிலைகளை செயல்படுத்துதல் மூலம் 2022/2023 ஆம் ஆண்டு முழுவதும் அறவீடுகளுக்கான வலுவான ஊக்கத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. | கடன் அறவீட்டு செயல்முறை செயற்திறனாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | விற்பனை அடிப்படையில் அதிகாரசபையினால் வீடுகள் வழங்கப்பட்ட 04 வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக | புனரமைக்கப்படாத (விற்பனை) அடிப்படையில் அகற்றப்பட்ட வீட்டு அலகுகளை பெறுநர்களிடமிருந்து | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தவணைப் பெறுமதி ரூபா 42.5 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 2-5 வருட காலப்பகுதிக்குள் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 11.3 மில்லியன் ஆகும். அதேவேளை, 05 வருடங்களுக்கு விஞ்சிய அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 22.8 மில்லியனாக இருந்ததுடன் அந்த பெறுமதி முறையே மொத்த கடன் தவணை மதிப்பில் 27 வீதம் மற்றும் 54 வீதமாகும். | நிலுவைக் கடன் தவணைகளை அறவீடு செய்வதற்காக கடன் மறுசீரமைப்பு, அழைப்பாணைக்கு அனுப்புதல் மற்றும் சட்ட நடவடிக்கை ஆகயவை தொடர்பில் கவனம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (இ) லுணாவ வீட்டு அலகுகளை அகற்றும் போது அடிப்படை கட்டணமாக வீடொன்றின் மொத்த பெருமதில் 25 சதவீதம் அதிகார சபைக்கு அளவீடு செய்வதற்கும், எஞ்சிய 75 சதவீதத்தினை அரசு வங்கியுடன் தொடர்புபட்டு 25 ஆண்டுகளில் செலுத்தும் கடன் வசதியினை நலனாளிகளுக்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும் அந்த 75 சதவீத பணத்தை 3 மாதங்களில் அதிகார சபைக்கு அரவீடு செய்வதற்கும் 2020 டிசம்பர் 22 ஆம் திகதிய அமப/20/1844/306/055 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்பட்ட இந்த வீடமைப்பு செயல் திட்டம் 2022 டிசம்பர் 31 ஆம் தேதி வங்கி கடன் அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக் கொண்ட 12 நலனாளிகளுக்கு வங்கியின் மூலம் அந்த விற்பனை பெறுமதியை | | வங்கி கடன் வசதியின் கீழ் கடன் விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் முழுமைப்படுத்தப்பட்டிராமை, அந்த காலப்பகுதியில் நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி நிலைமையின் அடிப்படையில் வங்கிக் கடன் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் மற்றும் கடன் வட்டி வீதங்கள் வரையறை இன்றி அதிகரித்த காரணத்தால் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | அகற்றப்பட்ட வீடுகளில் மொத்த பணத்தை அறவிடுவதற்கு உரிய வேலை திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டியவை. |

பெற்றுக்கொள்ள முடியாது இருந்தது.

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டம் | | | |
| (i) சட்டத்தின் அறிமுகம் | நகர குடியிருப்பு அபிவிருத்திக்காக தேசிய கொள்கையொன்றை தயாரிக்க மற்றும் அக் கொள்கையை செயற்படுத்துவதனை உறுதி செய்ய அதிகார சபை நிறுவப்படட் போதும், அதிகார சபையை நிறுவி 14 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த தேசிய கொள்கையை தயாரிக்க மற்றும் செயற்படுத்த அதிகார சபைக்கு இயலாதிருந்தது. எவ்வாறாயினும், வரிசை அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட கொழும்பு மறுமலர்ச்சி ஒத்துழைப்புத் திட்டத்தின் (SURP) ஒரு அங்கமாக நகர்ப்புற மறுமலர்ச்சிக் கொள்கையொன்றைத் தயாரித்தல் உள்ளடக்கப்பட்டிருந்த தை அவதானிக்க முடிந்ததுடன், அதற்கான வரைபும் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒரு பல்கலைக்கழகம் அல்லது அந்த பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரு நிறுவனம் செய்ய வேண்டிய பணி குறித்து பணிப்பாளர் சபை அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அதன்படி, இந்தக் கொள்கையைத் தயாரிக்க ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) மூலம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், இந்த முயற்சி தோல்வியடைந்தது. எனவே, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் நகர மற்றும் கிராம திட்டமிடல் திணைக்களத்தினால் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அதிகார சபை அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. | நகர்ப்புற வீடமைப்பு அபிவிருத்திக்கான தேசிய கொள்கையை உருவாக்குவது அதிகாரசபையின் பொறுப்பாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 10 ஆம் பிரிவு | அதிகாரசபையால் 2017 ஏப்ரல் அளவில் தலைவர் ஒருவரைக் கொண்ட 14 உறுப்பினர்களுக்கும் குறைவானவர்களுடன ஆலோசனைக் குழுவொன்றை நியமித்திருந்தது, எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையின் முன்மொழிவுகள், திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் செயல்நடவடிக்கை திட்டங்கள் போன்ற அதிகாரசபையின் நோக்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் எதிர்கால முன்மொழிவுகள், திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த புதிய முகாமைத்துவத்தின் கீழ் புதிய ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது. |
| (iii) | 16(1) (உ) உப பிரிவு | இந்தப் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், குறைந்த செலவிலான வீட்டுத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக, சொத்து மேம்பாட்டாளர்களிடமி ருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சேகரிக்கப்படும் அனைத்துப் பணமும் நகர குடியிருப்பு அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2010 டிசம்பர் 14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் இலக்கம் 10/2951/504/012 இன் படி, நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த சேவைக் கட்டணங்களை அறவிடுவதை நிறுத்தியிருந்ததால், | இது தொடர்பில் அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையிலான குழு ஆராய்ந்து அறிக்கையொன்றை அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளது. | சட்டத்தின் நோக்கங்கள் கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும், அதிகாரசபையின் சார்பில் வசூலிக்கப்படும் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை அந்த வருமானத்தை இழந்திருந்தது. சேவைக் கட்டணம் நிறுத்தப்பட்ட நேரத்தில், நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அறவிடப்பட்டிருந்த ரூபா 207.33 மில்லியன் சேவைக் கட்டணங்கள் நகரக் குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற தவறியிருந்தது. | | |
| | (iv) | 16(3) உப பிரிவு | அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக காணப்பட வேண்டியதுடன் அது பங்குகளாக அரசின் திரண்ட நிதியத்தில் இருந்து பெற வேண்டிய போதிலும் நீளாய் வாங்கி இறுதி வரையிலும் 14 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதிகார சபைக்கு எதிர்வித மூலதனமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் ரூபாய் 5,000 மில்லியன் ஆரம்ப மூலதனத்தை பெற்றுக்கொள்ள பொது திரை பேரிடம் தொடர்ச்சியாக அமைச்சின் ஊடாக கோரிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | அரசின் மூலதன பங்களிப்பினை தேவையானவாறு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 (ஆ) பிரிவு | | நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கடந்த வருடத்தில் ரூபா 1,195 மில்லியன் மற்றும் மீளாய் ஆண்டில் ரூபா 958 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சின் செயலாளர் ஊடாக SMUD/F/01/USDA ஆம் இலக்க 2022/11/25 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் 5 வருடங்களுக்கு தயாரிக்கப்பட்டு செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டம் மற்றும் அதற்கடுத்த ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் உரிய தரப்பினருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திராததுடன் அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான நல்லாளுகை வழிகாட்டிக் கோவையில் (ஆ) பிரிவில் உள்ள மாதிரியின் பிரகாரம் அதிகார சபையினால் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும் ஆண்டின் பிரதான பாதீட்டில் மதிப்பிடப்பட்ட நிதி நிலைமை கூற்று, மதிப்பிடப்பட்ட காசு பாய்ச்சல் கூற்று மற்றும் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் அந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டை தயாரிக்கும் போது அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 364.72 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 784.62 மில்லியன் ஆகும்.

அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 419.9 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 147.72 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும், வீடமைப்பு செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த இலாபம் ரூபா 534.1 மில்லியனால் குறைவடைந்தமை கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஆளணி வேதனம் ரூபா 18.5 மில்லியனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவினம விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்டப்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுக்கு உரியதாக நிறுவனத்தின் நிதிப் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விபரம் | 2022<br>ரூபா<br>மில்லியன் | 2021<br>ரூபா<br>மில்லியன் |
|---|---|---|
| திறைசேரி மானியம் மனிதவள அபிவிருத்தி | - | 26.98 |
| பிற்போடப்பட்ட வருமானம் - நிலையான சொத்துக்களின் அடிப்படையில் | 11.4 | 3.2 |
| வட்டி வருமானம் | 161.8 | 22.1 |
| ஏனைய வருமானம் | 12.9 | 4.96 |
| ஆளணி வேதனம் | 118.9 | 100.5 |
| போக்குவரத்துச் செலவினம் | 1.9 | 0.4 |
| மிகை | 364.2 | 784.6 |

(அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் வட்டி வருமானம் 631 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதற்கு நிலையான வாய்ப்புக்களின் மீதான வட்டி வருமானம் 826 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கம் செலுத்தியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் அதிகாரசபையில் ஒட்டுமொத்த வருமானத்தில் 29 சதவீதம் அரச மானியங்களால் மற்றும் 71 சதவீதத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்டிருந்தது.

(இ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஆளனி வேதன செலவினம் 18 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அதற்கு பதவியணி ஊக்குவிப்பு கொடுப்பனவு ரூபா 1.75 மில்லியனிலிருந்து ரூபா 4.74 மில்லியன் வரை சாதகமான முறையில் 170 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கடந்த வருடத்தில் அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 2.16:1 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 18.5:1 வரை அதிகரித்திருந்தது. வீடுகளை விற்பனை செய்தமை மூலம் பெற வேண்டிய வருமானம் 67 சதவீதத்தால் மற்றும் பதவியணிக்கு வழங்கப்பட்ட பெற வேண்டிய இடர் கடன் 71 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் 88 சதவீதம் குறைவடைந்தமையும் இந்த அதிகரிப்புக்கு பிரதானமாக காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஜுன் மாதம் 16 ஆம் திகதி பனிப்பாளர் சபை பத்திர இலக்கம் 05/2022/06 இன் கீழ் ரூபா 44.78 மில்லியன் பெறுமதியான குத்தகை வளங்கள் அதிகார சபைக்கு குத்தகை வருமானத்தை ஈட்டக் கூடியதாக இருந்த சஹஸ்புர வணிக அலகுகள் 67 மற்றும் பெறுமதி இனங்காணப்பட்டிராத 57 சேவை அலகுகள் திறந்த கொடுப்பனவு ஒன்றின் அடிப்படையில் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. | இந்த வீடமைப்பு முன்மொழிவு முறையை ஆரம்பித்த ரீல் கம்பனியால் குறித்த வணிக தளங்களுக்கு உரிய வருமானம் முழுமையாக முகாமைத்துவ கூட்டுதாபன நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அந்த நடைமுறையை சட்ட ரீதியாக்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்கு சொந்தமான வணிக அலகுகளிலிருந்து குத்தகை வருமானத்தை அதிகார சபை ஈட்ட வேண்டும் என்பது. |
| (ஆ) | 2020 திசெம்பர் 22 ஆந் திகதிய அமப/20/1844/306/055 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், விற்பனை விலையில் 50 சதவீதத்தினை அறவீடு செய்யாது ரூபா 4.74 மில்லியன் பெறுமதியான லுணாவ வீடமைப்பு முறைமையின் வீட்டு இலக்கம் 1/3/3 கொண்ட வீட்டு அலகின் விற்பனைப் பெறுமதியில் 25 சதவீதம், அதாவது 1.185 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டு வீட்டின் உரித்து கையளிக்கப்பட்டிருந்தது. | வீட்டில் உரிமையை கையேக்கும் நாளில் இருந்து ஒரு வருட காலப்பகுதியில் 6.25 சதவீத வருடாந்த வட்டி வீதத்திற்கு இணங்க எஞ்சிய தொகையை செலுத்தி நிறைவு செய்யுமாறு எமது அதிகார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் வீட்டின் உரித்தினை கையேற்ற திகதி முதல் எஞ்சிய பணத்தை செலுத்தி முடிக்கும் திகதி வரையான காலப்பகுதிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது ரூபா 25,000 ஆன கட்டணம் செலுத்தப்பட வேண்டியவுடன் எஞ்சிய பணம் செலுத்தும் போது அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள மொத்த பெறுமதி கழிக்கப்பட்டு எஞ்சிய தொகை செலுத்தப்பட வேண்டும். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

**3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அதிகாரசபையால் 512 வீட்டு அலகுகளுடன் கட்டுமானங்கள் நிறைவு செய்யப்பட்ட 03 வீடமைப்பு முன்மொழிவு முறைகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள வீடமைப்பு முன்மொழிவு முறையொன்று அமைந்துள்ள 2.32 ஹெட்டேயர்கள் பரப்பளவான காணி குறித்த நிறுவனங்களிலிருந்து சுபிகரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. அதன் காரணமாக நிர்மாணிக்கப்பட்டு உரித்து கையளிக்கப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் பெறுநர்களுக்கு காணி உரித்துறுதியை வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக வீடமைப்பு முறைகளின் முகாமைத்துவ கூட்டமைப்புகள் நிறுவப்பட்டு வீடுகளில் பொறுப்பினை சாட்டுவதற்கு முடியாது இருந்தது. | நிலவும் சட்ட நடைமுறை காரணமாக காணியை எமது அதிகாரசபைக்கு பெற்றுக் கொள்ளும் நடைமுறையில் தாமதம் ஒன்று நிலவுகிறது. மேற்படி வீடமைப்பு செயல்திட்டங்களின் வீடுகளுக்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு 20 முதல் 30 வருடங்கள் வரை ஆன காலவீச்சுக்கு குறித்த நலனாளிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதனால் உரித்துறுதியை வழங்குவதற்கு அனைத்து கொடுப்பனவுகளும் நிறைவு செய்யப்பட வேண்டியதாக உள்ளது. | காணியை சுவிகரிக்கும் நடவடிக்கைகள் தாமதம் இன்றி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | அதிகாரசபையினால் லுணாவ வீடமைப்பு செயல் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு இருந்த 356 வீட்டு அலகுகள் விற்பனை அடிப்படையில் கடந்த வருடத்தில் அகற்றப்பட்டிருந்த போதிலும் வீடுகளை பெற்ற நலனாளிகளுக்கு உரித்துறுதிகளை வழங்குதல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை, | லுணாவ வீடமைப்பு உத்தேச முறைமைக்கு உரியதாக கூட்டு ஆதன கூற்றினை தயாரிப்பதற்கு உரிய பட்டயம் பெற்ற பொறியியலாளர் ஒருவரின் அங்கீகாரத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டம், அனுகூல சான்றிதழ், கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழ், நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட மற்றும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையால் | உரிய நிறுவனங்களுடன் தொடர்புபட்டு உரிய தேவைப்பாடுகளை துரிதமாக பூர்த்தி செய்து உரித்துறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை, நில அளவையாளர் திணைக்களம், உரித்து பதிவாளர் அலுவலகம் மற்றும் மொரட்டுவ மாநகர சபை ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய அனுமதிகளை பெற்றுக் கொள்ளாமை பிரதான காரணமாக அமைந்திருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட கூட்டு ஆதன வரைபடம் மற்றும் உரிய கூட்டு ஆதன அலகுகளுக்கான வீத வரி இலக்கம் ஆகியவை இதுவரை கிடைத்திருக்கவில்லை என்பதால் குறித்த கூட்டு ஆதன கூற்றின் பணிகள் இதுவரை நிறைவு செய்ய முடியாது இருந்தது. | |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 டிசம்பர் 22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/20/1844/306/55 இற்கு முரணாக அதிகாரசபையால் 01/2021/15 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்கும் போது வீடுகளின் விற்பனை விலையினை தீர்மானிக்கும் போது அதிகாரசபைக்கு அறவிடப்படும் 20 சதவீத சேவை கட்டணம் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது இருப்பதற்கும் வீடுகளில் விற்பனை விலையாக அரச மதிப்பீட்டினை மாத்திரம் அறவீடு செய்து அந்த கிரயத்தை 25 வருட காலத்தினுள் 2 சதவீத சலுகை வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் செலுத்துவதற்கான இலகு கொடுப்பனவு நடைமுறையொன்று செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி அளவில் அதிகாரசபையின் | நிரந்தர வீடு இல்லாத அதிகார சபையின் ஊழியர்களின் கோரிக்கையின் அடிப்படையில் 01/2021/15 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் பொதுவான விற்பனை விலை தீர்மானிக்கும் போது சேர்க்கப்பட்ட 20 சதவீத சேவை கட்டணத்தை அறவீடு செய்யாது, ஆகக் கூடியது 25 வருட காலத்திற்கு 2 சதவீத வருடாந்த வட்டியின் கீழ் தகைமை வாய்ந்த 22 உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் வழங்குவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>மேற்படி அடிப்படையில் பதவியணிக்கு வீடுகளை வழங்கிய காரணத்தால் பெற வேண்டிய ரூபா 90.3 மில்லியன் பணம் எதிர்வரும் 25 வருட காலத்தில் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் கழிக்கும் அடிப்படையில் அனைத்து ஊழியர்களும் அதிகார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தனர். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியவை மற்றும் அதற்கு முரணாக செயல்படுவதற்கு மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது. |

உத்தியோகத்தர்களுக்கு 22 வீட்டு அலகுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை தீர்மானத்திற்கு எதிராக செயல்பட்டமையின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 18.96 மில்லியன் ஆக காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபையால் மீனவ மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அங்குலான அடுக்குமாடி முறைமையில் நிலவிய 288 வீட்டு அலகுகளில் ரூபா 62.87 மில்லியன் பெறுமதியான 53 வீட்டு அலகுகள் பணம் அளவிடப்படாது கட்டண விடுவிப்பு பத்திரத்தின் அடிப்படையில் 2016 செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் 2019 பிப்ரவரி 12ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் சினிமா கலைஞர்களுக்கு மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு உரித்து வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அதாவது 2019 செப்டம்பர் 18 ஆம் திகதிய அமப/இல/19/2761/122/085 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அந்த வீடுகளுக்கு நியாயமான தொகை ஒன்றினை நலனாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்த தொகையும் அளவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சட்டமா அதிபரின் 2022 டிசம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின் அறிவுரைக் அமைய 32 வீட்டு அலகுகளுக்கு

கட்டண விடுவிப்பு வழங்கப்பட்டிருந்த 53 வீட்டு அலகுகள் தொடர்பில் 2019 செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதிய மற்றும் அமப/இல/19/2761/122/085 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டு நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாகவும், 2022 ஆம் ஆண்டின் 06 மாத காலம் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டின் மத்தியில் கடமைகளை மட்டுப்படுத்தி மேற்கொள்ள நேர்ந்ததுடன் உரிய முறையில் கடமைகளை ஆரம்பித்தவுடன் இந்த உடன்படிக்கையை உடனடியாக கைச்சாத்திடுதல் ஆரம்பிக்கப்பட்டது.

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியவை மற்றும் அதற்கு முரணாக செயல்படுவதற்கு மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது.

| | | | |
|---|---|---|---|
| | உரிய விடுவிக்கப்பட்ட கட்டணத்தை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வரையறுக்கப்பட்ட ரியல் எஸ்டேட் எக்ஸ்சேஞ்ச் (தனியார்) கம்பனி அதிகாரசபைக்கு சுவீகரித்த போது ஏற்பட்டிருந்த ரூபா 47.75 மில்லியன் நிதி மோசடிக்கு உரியதாக சட்டமா அதிபரால் 2021 அக்டோபர் 28 ஆம் திகதி வழங்கப்பட்ட சட்ட அறிவுரைக்கமைய நட்டத்தினை அறவீடு செய்வதற்கு உரிய நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். எனினும் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்பதை கருத்தில் கொள்வதற்கு வரிசை அமைச்சினால் நிதிப்பிரமாணம் 103 (அத்தியாயம் ii) இன் பிரகாரம் செய்யப்பட்டு பொறுப்பு கூற வேண்டிய நபர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை சரியாக கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வரிசை அமைச்சினால் 2023 ஜுன் மாதம் வரையிலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 செப்டம்பர் 28 ஆம் திகதி வரிசை அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை இது தொடர்பில் விசாரணைகளுக்கு குழுவொன்றினை நியமித்து, அக்குழுவினால் குறித்த சம்பவத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய நபர்களை வரவழைத்து விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது. | சட்டமா அதிபதி அறிவுரைக்கமைய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை அளவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1523(Vol – 1) ஆம் இலக்க மற்றும் 2019 | USDA/ADM/03/71-2021-1 ஆம் இலக்க 2022 அக்டோபர் 28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்வு முகாமைத்துவ | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | மே 22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறை பழைய மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டது என்பதும் அதனை புதிய மாதிரிக்கு இற்றைப்படுத்துவதற்கு உரிய அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2023 ஏப்ரல் வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட வரைபில் முன்னேற்றம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு துரிதமாக எமக்கு அனுப்புமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. | பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 153 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த பதவியணி 13 ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளபடியான உண்மைப் பதவியணி முறையே 126 மற்றும் 03 ஆகும். அதன் பிரகாரம், பதவியணி வெற்றிடங்கள் 37 காணப்பட்டதுடன், இவ்வாறு வெற்றிடங்கள் நிலவுதல் நிறுவனத்தின் கறைவான செயலாற்றலுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. | அரச சேவையில் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்கு அமைச்சரவை அதிகாரிகள் குழுவிற்கும் அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்வதற்கு அல்லது அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

**4. கணக்களிதகைமையும் நல்லாலுகையும்**

**4.1 ஆண்டறிக்கை**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் லுனாவ வீடமைப்புத் திட்டத்தின் மூலம் 341 வீட்டு அலகுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன, அதில் 128 வீடுகளை வாங்கியோரால் மொத்தத் தொகையான ரூபா 646.08 | வரைவு ஆண்டு அறிக்கை முதலில் 2023 பெப்ரவரி 22 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் இந்த பொருண்மையான பெறுமதி வேறுபாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | ஆண்டறிக்கையில் உள்ள தகவல்கள் நிதிநிலை நிதிக்கூற்றுக்களுடன் இணக்கமாக இருக்க வேண்டும் மற்றும் 2023 செப்டம்பர் 06 அன்று அமைச்சின் செயலாளரால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் வரைவு ஆண்டறிக்கையின் பிரகாரம், 140 வீட்டு உரிமையாளர்களால் ரூபா 664.08 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. | | ஆணடறிக்கையில் இந்த திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அவ்வாறே வீட்டு அலகுகளின் பெறுமதியில் 50 சதவீதம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ள வீட்டு அலகுக்கு உரிய விற்பனை பெறுமதி ரூபா 912.38 மில்லியனும் அந்த வீட்டு அலகுகளுக்குரிய பண பெறுவனவு பெறுமதி ரூபா 464.28 மில்லியன் ஆனபோதிலும் வரைவு ஆண்டறிக்கையின் பிரகாரம் அந்த பெறுமதிகள் முறையே ரூபா 912.91 மில்லியன் மற்றும் ரூபா 460.38 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டறிக்கையின் வரைபு ஆண்டறிக்கை 2023 பெப்ரவரி 22 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் இந்த பொருண்மையான பெறுமதி வேறுபாடு உள்ளடக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | வீட்டு அலகுகளின் பெறுமதியில் 25 சதவீதம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ள 12 வீட்டு அலகுக்கு உரிய விற்பனை பெறுமதி ரூபா 61.62 மில்லியனும் ஆன போதிலும், வரைபு ஆண்டறிக்கையின் பிரகாரம் அந்த பெறுமதிகள் முறையே 13 வீட்டு அலகுகள் மற்றும் ரூபா 66.36 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உள்ள பெறுமதிகளின் பிரகாரம், ஆணடடறிக்கையில் இந்த வெளியிடப்பட்ட பெறுமதிகளை சரியாக காண்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் நோக்கத்தை அமைந்து கொள்ள 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அதிகார சட்டத்திற்கு இணங்க நிரைவேற்ற வேண்டிய பின்வரும் விடயங்கள் | 2023-2025 சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நகர்ப்புற குடியிருப்பாளர்களின் பொருளாதார மற்றும் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளை அதிகாரசபை நிறைவேற்ற |

| | | |
|---|---|---|
| கூட்டிணைந்த திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய நகர குடியிருப்பாளர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை கண்டறிவது தொடர்பான கணிப்பீடு மற்றும் கற்கை நடவடிக்கைகளை நடாத்துதல் மற்றும் தேசிய ரீதியாக தொடர்புபடும் நகர வீடமைப்பு கடன் உத்தேச திட்டததை அமுல்படுத்துதல் ஆகிய பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. | சமூக நிலையைக் கண்டறிவதற்கான நாடளாவிய ஆய்வுகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு நாளதுவரையாக்கப்படுகின்றன.<br><br>நகர்ப்புற வீட்டுக் கடன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு திறைசேரி ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படாததால், வணிக வங்கிகள் மூலம் கடன் வழங்கும் முன்மொழியப்பட்ட திட்டத்தின் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மூலோபாயத் திட்டத்தின் எதிர்கால புதுப்பிப்பில் இது சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | வேண்டும் என்பதுடன், அவற்றை கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்க வேண்டும். |

## 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, 06 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் 02 திட்டங்களில் பௌதீக முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை. மேலும், 04 செயற்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளில் 5 வீதம் முதல் 16 வீதம் வரையான பௌதீக முன்னேற்றம் மட்டுமே எட்டப்பட்டுள்ளதுடன், நிதி முன்னேற்றம் 1 வீதத்திலிருந்து 69 வீதமாக காணப்பட்டது. மேலும், 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 02 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | துடுவேகொட/ நாவலப்பிட்டி செயற்திட்டம் 02 பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அதிலிருந்து துடுவேகொடை திட்டத்தை PPP முறையில் அரசுக்கு செலவு செய்யாமல் நிறைவேற்ற பணிப்பாளர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. அதிகாரசபையின் உள்ளக வருமானத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டத்தில் 06 திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வெலிசர, நிட்டம்புவ, ஜயவர்தனபுர, கடுவெல ஆகிய 04 வீடமைப்புத் திட்டங்கள் 2 | திட்டமிட்டபடி திட்டங்களை செயல்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சதவீதத்திலிருந்து 16 சதவீதமாக பௌதீக முன்னேற்றத்தையும், 1.28 சதவீதத்திலிருந்து 69.19 சதவீத நிதி முன்னேற்றத்தையும் எட்டியுள்ளன. சிலாபம் வீடமைப்புத் திட்டத்தின் வடிகால் அமைப்பைத் தயாரிப்பது 2023 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பொதுச் செலவுக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களைக் குறைக்கும் வகையில் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியை அடையாளம் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | |

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் கணக்காய்வு பிரிவிற்காக உள்ளக கணக்காய்வாளர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் கடந்த கால கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலேனும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவியானது இடைநிலை முகாமைத்துவ மட்ட (MM) பதவியாக தொடர்ந்தும் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், இப்பிரிவிற்கு கணக்காய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்காது இரண்டு முகாமைத்துவ உதவியாளர் அலுவலர்கள் மாத்திரம் | பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) HM-1-1 பதவியை உருவாக்க 2023 ஏப்ரல் 04 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வினை வலுப்படுத்துவதன் மூலம், அதிகாரசபையின் பணிகளை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள முடியும் என்பது. |

இணைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே மீளாய்வாண்டுக்காள உள்ளக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 18 நிகழ்ச்சித்திட்டங்களில் 4 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரிய கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் செயலாற்றலினை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தால் ஆக்கபூர்வ கட்டுபாட்டு உபாயமொன்றாக பாதீட்டை பயன்படுத்தி இருக்காததுடன் பாதிடப்பட்ட செலவுகளை உள்ளவாறான செலவுகளுடன் ஒப்பிடுபையில் 1 சதவீதம் முதல் 232 சதவீதம் வரையான கவனிக்கத்தக்க முரன்பாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாத 06 செலவின உருப்படிகளுக்காக மீளாய்வாண்டினுள் அதிகாரசபையால் ரூபா 1,974,419 செலவிடப்பட்டிருந்தது. | பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு மூலோபாயமாக பயன்படுத்த அதிகாரசபையின் கவனம் செலுத்தப்படும். | பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு மூலோபாயமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |